Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PeoplesDaily    மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 14 [27-03-1993] சனிக்கிழமை ஓசை 37

## யாழ். செயலகத்தில் மகாபொல வைபவம்

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற இருக்கும் மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் மிக அமைதியான முறையில் யாழ். செயலகத்தில் நடைபெற வுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். மேற்படி வைபவத்தில் மகாபொல பெறும் மாணவர்கள் சமுகம் தரும்படியும், தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்ட பொது மக்கள் சமுகமளிப்பது தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். இவ் வைபவம் இன்று சகல மாவட்டங்களிலும் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இப்புலமைப்பரிசில் முன்னர் யாழ். பல்கலைக் கழகத்தில் வைத்து வழங்கப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 7 சீன ஜெட் போர் விமானங்கள்
# சிறிலங்கா அரசு கொள்வனவு

## பொறியியலாளர், பயிற்சியாளர் வழங்கவும் சீனா முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படை ஏழு எவ் - 7 ரக சுப்பர் சொனிக் விமானங்களைக் கொள்வனவு செய்துள்ளது. சீனத்தயாரிப்பான இந்த ரக விமானங்கள் நான்கு ஏற்கனவே சிறிலங்கா விமானப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதே வேளை இப்புதிய விமானங்களுடன் பயிற்சியாளர்களையும், பொறியியலாளர்களையும் வழங்க சீனா முன்வந்துள்ளது

அதிவேகமாகப் பறந்து தாக்குதல் நடத்தக் கூடிய எவ் - 7 வடக்கில் போரிடும் படையினருக்கு பெரிதும் உதவியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அடுத்து சீன அரசுடன் நேரடியாகப் பேரம் பேசியதன் பேரில் சீன தயாரிப்பாளரிடமிருந்து ஏழு எவ்-7 விமானங்களை சிறிலங்கா விமானப்படை கொள்வனவு செய்துள்ளது என்று சிறிலங்கா விமானப் படை நடவடிக்கைப் பொறுப்பதிகாரி எயர் கொமடோர் ஆன்சலம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிரி இலக்குகள்மீது தாக்குதல் மேற்கொள்ள வடிவமைக்கப்பட்ட எவ்-7 விமானம் சுமார் 1500 கிலோ எடையுள்ள வெடிமருந்துகளையும், போர்க் கருவிகளையும் கொண்டு பறக்கக் கூடியது. இந்த விமானத்தில் 30 எம். எம். பீரங்கிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

சோவியத் தயாரிப்பான மிக்-21 க்குச் சமதையான எவ்-7 தாக்குதல் விமானம் ஒலியை விட இரு மடங்கு வேகமாகப் பறக்கக் கூடியது. இந்த விமானத்தின் ஆகக் கூடிய வேகம் மணித்தியாலம் ஒன்றுக்கு 2,400 கிலோ மீற்றர்களாகும். இலக்கு நோக்கித் தாக்கும் போது இதன் ஆகக் குறைந்த வேகம் மணித்தியாலம் ஒன்றுக்கு 340 கிலோ மீற்றர் ஆகும். சாதாரணமாக சராசரி ஒரு மணித்தியாலத்துக்கு 920 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கக் கூடியது.

எவ்-7 விமானங்களை சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இல: 5 ஜெட் அணியைச் சேர்ந்த விமானிகள் கொழும்புக்கு ஓட்டி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விமானங்களுடன் சேர்ந்து விமானப் பயிற்சியாளரையும், பொறியலாளரை

( 4 ஆம் பக்கம் பார்க்க )



சீனத்தயாரிப்பான எவ் – 7 சுப்பர்சொனிக் விமானம்

### மீட்புநிதி சேகரிப்பு

நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றிஅரசன் அறிவித்துள்ளார்.

### வீரச்சாவு



லெப். வரகுணம் [காசிநாதன்]

மட்டக்களப்பு குடும்பிமலைப் பகுதியில் கடந்த 20ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் லெப்டினன்ட் வரகுணம்/காசிநாதன் [தாமோதரம் தவசீலன் சித்தாண்டி, மொறக்கொட்டாஞ்சேனை] வீரச்சாவடைந்தார்.

**வீரவேங்கை பிரேம்குமார்**

மட்டக்களப்புகஞ்சிகுடிச்சாறு பகுதியில் கடந்த 19ஆம் திகதி விசேட அதிரடிப் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை பிரேம்குமார் [இராமக்குட்டி அருளம்பலம்- கோளாவில், அக்கரைப்பற்று] இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### மிதிவெடியில் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில்புலிகளின் மிதி வெடிக்கு இராணுவ சிப்பாய் ஒருவர் பலியானார் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மாதகல் இராணுவ முகாமில் இருந்து கடற்கரை யோர

[04 ஆம் பக்கம் பார்க்க]

### தீர்வை ஏற்படுத்தும் வலு சிங்கள தலைவருக்கு இல்லை

-தமிழ் பா. உ. தெரிவிப்பு

கடந்த பதினைந்து வருடங்கள் ஆட்சிசெய்யும் ஐக்கிய தேசியக் கட்சியோ, மாற்று அரசாங்கம் ஒன்றை உருவாக்கக்கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ, இல்லையேல் இந்த நாட்டில் நடைபெற்ற சர்வ கட்சி மாநாடுகள், பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள், எவற்றினாலும் தமிழ் மக்க

தீர்வு முன்வைக்கப்படவில்லை எனவேதான் இப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணக்கூடிய வலு எந்தத் தலைவருக்கும் இல்லை என்று கருதவேண்டியுள்ளது. ஆதலால் தான் ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புக்கள் இனப்பிரச்சினையில்தலையிட வேண்டும் என்று எதிர்பார்க்

### அரிசி, நெல், பால்மா விநியோக விபரம்

நியாய விலையில் குடா நாட்டு மக்களுக்கு அரிசியை

வும் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள்

பிரேம்குமார்

மட்டக்களப்புகஞ்சிகுடிச்சாறு பகுதியில் கடந்த 19ஆம் திகதி விசேட அதிரடிப் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீர வேங்கை பிரேம்குமார் [இராமக்குட்டி அருளம்பலம்- கோளாவில், அக்கரைப்பற்று] இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அதிவேகமாகப் பறந்து தாக்குதல் நடத்தக் கூடிய எவ் - 7 வடக்கில் போரிடும் படையினருக்கு பெரிதும் உதவியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அடுத்து சீன அரசுடன் நேரடியாகப் பேரம் பேசியதன் பேரில் சீன தயாரிப்பாளரிடமிருந்து ஏழு எவ்-7 விமானங்களை சிறிலங்கா விமானப்படை கொள்வனவு செய்துள்ளது என்று சிறிலங்கா விமானப் படை நடவடிக்கைப் பொறுப்பதிகாரி எயர் கொமடோர் ஆன்சலம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிரி இலக்குகள்மீது தாக்குதல் மேற்கொள்ள வடிவமைக்கப்பட்ட எவ்-7 விமானம் சுமார் 1500 கிலோ எடையுள்ள வெடிமருந்துகளையும், போர்க் கருவிகளையும் கொண்டு பறக்கக் கூடியது. இந்த விமானத்தில் 30 எம். எம். பீரங்கிகளும் இணைக்கப் பட்டுள்ளன.

சோவியத் தயாரிப்பான மிக்-21 க்குச் சமதையான எவ்-7 தாக்குதல் விமானம் ஒலியை விட இரு மடங்கு வேகமாகப் பறக்கக் கூடியது. இந்த விமானத்தின் ஆகக் கூடிய வேகம் மணித்தியாலம் ஒன்றுக்கு 2,400 கிலோ மீற்றர்களாகும். இலக்கு நோக்கித் தாக்கும் போது இதன் ஆகக் குறைந்த வேகம் மணித்தியாலம் ஒன்றுக்கு 340 கிலோ மீற்றர் ஆகும். சாதாரணமாக சராசரி ஒரு மணித்தியாலத்துக்கு 920 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக் கூடியது.

எவ்-7 விமானங்களை சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இல: 5 ஜெட் அணியைச் சேர்ந்த விமானிகள் கொழும்புக்கு ஓட்டி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விமானங்களுடன் சேர்ந்து விமானப் பயிற்சியாளரையும், பொறியலாளரை

( 4 ஆம் பக்கம் பார்க்க )



சீனத்தயாரிப்பான எவ் - 7 சுப்பர்சொனிக் விமானம்

## அரிசி, நெல், பால்மா விநியோக விபரம்

நியாய விலையில் குடாநாட்டு மக்களுக்கு அரிசியை வழங்குவதென்ற திட்டப்படி முதற்கட்ட வழங்கலுக்குத் தேவையான அரிசி முழுவதையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ளமுடியாத காரணத்தால், அரிசியுடன் நெல்லும் சேர்த்து வழங்கப்படவுள்ளது.

பின்வரும் சங்கங்களில் பங்கீட்டுப் பொருள்களைப் பெறுவோர், நாளை ஞாயிற்றுக்கிழமையிலிருந்துமூன்றுநாட்களுக்குள் தமது குடும்பஅட்டையையும், பங்கீட்டு அட்டையையும் காண்பித்து, குடும்பத்திற்கு 3 கிலோ நெல்லும், 2 கிலோ அரிசியும், 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கு 400 கிறாம் லக்ரோஜன் பால்மாவும் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப்பொறுப்பாளர் செ. தமிழேந்தி அறிவித்துள்ளார்.

விலை விபரம் - நெல் ஒரு கிலோ 19/-, குத்தரிசி ஒரு கிலோ 29/-, பால்மா 400 கிறாம் 80/-.

சங்கங்கள் - அச்சுவேலி, பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, அளவெட்டி, காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, வேலணை, கட்டைவேலி, புலோலி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பச்சிலைப்பள்ளி.

ஏனையசங்கங்களுக்கூடான வழங்கல் பற்றி ஓரிரு நாட்களில் தெரிவிக்கப்படும்.

## விவசாய தேவைக்கு உரம் பெறமுயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் சிறுபோகம் மற்றும், பெரும்போக பயிர்ச்செய்கையினை விரிவான முறையில் மேற்கொள்வதற்குத் தேவையான உரவகைகளை முற்கூட்டியே கொள்வனவு செய்து வைத்திருந்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ். செயலகத்தில் யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரவகைகளை முற்கூட்டியே மதிப்பீடு செய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளது.

இக்குழுவினர் சிறுபோகத்திற்குத்தேவையான உரத்தின் அளவு மற்றும் பெரும்போகத்திற்குத் தேவையான உரத்தின் அளவு, என்கின்ற அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு சிபார்சுகளை செய்வார்கள் என தெரியவருகின்றது. (பா)

## க. பொ. த. உயர்தர பரீட்சை விண்ணப்ப படிவங்களை உடன் அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை 1993 இற்கான விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்து உடன் யாழ். கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்கும்படி யாழ். பிரதேச சகல பாடசாலை அதிபர்களையும் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்

மேற்படி விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்து ஒவ்வொரு பாடசாலைகளும் பரீட்சைத் திணைக்களத்திற்கு நேரடியாக அனுப்புவதில் உள்ள இடர்பாடுகளை போக்குமுகமாகவே இவற்றை யாழ். பிரதேச கல்விப் பணிமனையில் ஒப்படைக்கும் படியும் பின்னர் எல்லா பாடசாலை விண்ணப்பப் படிவங்களையும் சேர்த்து கப்பல் மூலம்

[04 ஆம் பக்கம் பார்க்க]

# பொன்னாலை சந்தியில் 3 விமானங்கள் தாக்குதல்

### கட்டடம் சேதம்

பொன்னாலைச் சந்தியில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான மூன்று குண்டு வீச்சு விமானங்கள் அகோர குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின. இவ் விமானங்களுக்கு உதவியாக உலங்கு வானூர்தி ஒன்று மக்கள் குடியிருப்புக்களை வட்டமிட்டு நோட்டமிட்ட வண்ணம் இருந்தது.

காலை சுழிபுரம், தொல்புரம், மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளை மையமாக வைத்து பல தடவை வட்டமிட்ட மூன்று குண்டு வீச்சு விமானங்கள் அடுத்தடுத்து ஆறு குண்டுகளை வீசின. இதில் நான்கு குண்டுகள் வெடித்ததாகவும், இரு குண்டுகள் வெடிக்கவில்லை எனவும் தெரியவருகிறது.

இக் குண்டுகளில் ஒன்று பொன்னாலைச் சந்தியிலுள்ள இறால் சேகரிப்பு நிலையக் கட்டடத்தில் விழுந்து வெடித்ததினால் அக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்தது. மிகுதிக் குண்டுகள் கரையோரத்தை அண்மித்த வெளியான பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இக் குண்டு வீச்சுத் தாக்குதல் சம்பவத்தின் போது எவ்வித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது. (41),(11),(09)

## மிதிவெடியில் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில்புலிகளின் மிதி வெடிக்கு இராணுவ சிப்பாய் ஒருவர் பலியானார் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மாதகல் இராணுவ முகாமில் இருந்து கடற்கரை யோர

[04 ஆம் பக்கம் பார்க்க]

## தீர்வை ஏற்படுத்தும் வலு சிங்கள தலைவருக்கு இல்லை

-தமிழ் பா. உ. தெரிவிப்பு

கடந்த பதினைந்து வருடங்கள் ஆட்சிசெய்யும் ஐக்கிய தேசியக் கட்சியோ, மாற்று அரசாங்கம் ஒன்றை உருவாக்கக்கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ, இல்லையேல் இந்த நாட்டில் நடைபெற்ற சர்வ கட்சி மாநாடுகள், பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள், எவற்றினாலும் தமிழ் மக்களால் ஏற்கப்படக்கூடிய ஒரு தீர்வு முன்வைக்கப்படவில்லை எனவேதான் இப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணக்கூடிய வலு எந்தத் தலைவருக்கும் இல்லை என்று கருதவேண்டியுள்ளது. ஆதலால் தான் ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புக்கள் இனப்பிரச்சினையில்தலையிட வேண்டும் என்று எதிர்பார்க்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பகுதியில் படை நடவடிக்கை

(வவுனியா

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளை விஸ்தரிக்கும் நோக்குடன் இராணுவ நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கம்மனவை மேற்கோள் காட்டிசெய்திகள் வெளியாகியுள்ளன.

## நிலக் கண்ணிவெடிக்கு படை அதிகாரி பலி

[கொழும்பு]

கண்ணிவெடிக்கு ஒரு இராணுவ உயர் அதிகாரியும் ஒரு இராணுவ சிப்பாயும் பலியாகியுள்ளனர் என சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபகுதியில் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் ட்ரக்டர் வண்டியில் சென்ற இந்த இராணுவத்தினரே நிலக் கண்ணிவெடிக்கு பலியாகினர் என்று தெரியவருகின்றது.

## இராணுவ ஆக்கிரமிப்பு பகுதியில் இனம் தெரியாதோரால் பொதுமக்கள் கடத்தல்

[கொழும்பு]

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து கடந்த சில தினங்களில் மட்டும் 11 பேர் காணாமல்போயிருப்பதாக கூறப்படுகிறது.

இவ்வாறு காணாமற்போன 11 பேரில் பண்டாரிக்குளம் பாடசாலையிலிருந்து 3 பெண்களும் ஆடைத்தயாரிப்பு நிலையத்திலிருந்து 3 பெண்களும் அடங்குவர் என தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதம் தாங்கிய குழுவினரே இவர்களை கடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த முதலாம் திகதி வவுனியா கல்வித் திணைக்கள ஊழியர் விடுதியிலிருந்த பொன்னுத்துரை முருகேசு என்பவர் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டதாகவும் இவர் குறித்து பொலீஸில் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை இவ்வாறு

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## 'வாதுவ' புறப்பட்டது

பருத்தித்துறை இறங்கு துறையில் உணவுப் பொருள்களை நேற்று நண்பகலுடன் இறக்கி முடித்த ''வாதுவ'' கப்பல் மாலை கொழும்பு நோக்கி புறப்பட்டது.

யாழ். தபால் திணைக்களம் இக் கப்பலில் 80 தபால் பொதிகளை அனுப்பி வைத்துள்ளது. [யோ]

## திருமலை தாக்குதலில் 2 சிப்பாய்கள் பலி

திருமலையில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரு இராணுவ சிப்பாய்கள்பலியாகியுள்ளதாக ஏ. எவ். பி. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

## விமானத் தாக்குதலில் 15 பொதுமக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைவிமானப்படை விமானங்களின் குண்டு வீச்சுக்கு 15க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்ததாக ஏஜன்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## மக்கள் குடியிருப்புகள் மீது எறிகணைத் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் பகுதியில் சிறிலங்காஇராணுவத்தினர் இரவு வேளைகளில் மக்கள் குடியிருப்புகள் மீது எறிகணைத் தாக்குதல்களையும் கலிபர் தாக்குதல்களையும் நடாத்தி வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக அடம்பன், நானாட்டான் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரே ஆண்டான்குளம் கருங்கண்டல் பகுதிகள் மீது மேற்படி தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

தொடர்ச்சியாக சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொள்ளும் இத்தகைய தாக்குதல்களால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்து காணப்படுகின்றனர். இப்பகுதி பொதுமக்களின் வீடுகள் மற்றும் விவசாய உற்பத்திகள் பெரிதும் சேதமடைந்துள்ளன.

## யாழ். பல்கலையில் அஞ்சலி

கிளாலிப் பகுதியில் கடந்த 24-ம் திகதி நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் பலியான யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் வில்சன் நிக்கலஸின் பூதவுடல் அஞ்சலிக்காக நாளை நண்பகல் 12 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் 2 மணி முதல் 3 மணி வரை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கிலும் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

## வரி விளம்பரம்

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகல றேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள் மற்றும் மின்சார உபகரணங்கள், எலக்ரோனிக் ஓட்டோ மற்றிக் கடிகாரங்கள் மேசை, சுவர் மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேர்ஸ்3, கண்டி வீதி (இலங்கை வங்கி அருகாமையில்). சாவகச்சேரி. (சி-6126)

### சோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதவும் கைரேகை, எண்சோதிடம் பார்க்கவும். விவாகப் பொருத்தம், வீட்டுக்கு நிலையம் நிச்சயிக்கவும் நேரில் சந்திக்கலாம். தினமும் காலை 8-30—12-30, பிற்பகல் 3-00—6-00. த. சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 384. கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (4560)

### சத்தியா நகைத் தொழிலகம்

சகல விதமான நகைத் திருத்த வேலைகளும் மற்றும் வெள்ளி, செப்பு, பித்தளை போன்ற ஆபரணங்களுக்கும் (கிளிற்) தங்கம் பூசி உடனுக்கு உடன் செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம், 176/5 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். (சி-6261)

### தவறிவிட்டது

யாழ். நகரிலிருந்து கொக்குவில் சந்திக்குள் வி. அட்டலட்சுமி என்பவருடைய அடையாளஅட்டையும்457260369V மண்மீட்புநிதி பற்றுச்சீட்டும் 13940 மூன்று புகைப்படங்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் அடையாள அட்டையிலுள்ள முகவரிக்கோ அல்லது ராஜன் புத்தகசாலை 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம் முகவரியில் ஒப்படைக்கவும். தக்க சன்மானம் வழங்கப்படும். (4077)

லிங்கம் கூல்பாரிற்கும் - பெருமாள் கோயிலுக்குமிடையில் தொழில் அடையாளஅட்டை. கல்லூரி அநுமதி அட்டை வங்கி ஆவணங்கள் சிறு தொகைப்பணம் என்பனவற்றுடன் மணிபர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லிங்கம் கூல்பாரில் கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-6274)

### பாதுகாத்துக் கொள்ளுங்கள்

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 — 09 — 1954



மறைவு 27 — 03 — 1990

### சிவராமலிங்கம் சிவமோகன்

(ராஜாஜி)

ஆண்டு மூன்று கடந்தது
நீள நினைக்கும்

'தணிகை'
28, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்
பெற்றோர், தம்பி,
உற்றார், உறவினர்கள்.
(சி/6207)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அருமைத்துரை தர்மராசா

(நிமலன்)

தென்மராட்சி பேக்கரி உரிமையாளர் சங்க - உபசெயலாளர்)

மலர்வு: 01-03-1973

உதிர்வு: 25-02 1993

விதி செய்த சதியோ நிமலா
மின்னலென உமைப் பிரிந்தோம்

---

## இதய அஞ்சலி

அன்னை மடியில் 28-07-1971

அன்னை மண்ணில் 24-03-1993

செல்வன்

### ஞா. வில்சன் நிக்கலஸ்

(1-ம் வருடம் யாழ். மருத்துவபீடம்)

யாழ். மருத்துவ பீட முதலாம் வருட மாணவன் செல்வன் ஞா. வில்சன் நிக்கலஸ் அவர்களுக்கு எமது இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினர், மருத்துவபீடத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

(4571)

## அவசர வேண்டுகோள்

1993ஆம் ஆண்டு சித்திரை மாதம்
வைத்திய பயிலுநராக (INTERNSHIP)
நியமனம் பெறுவதற்கு எதிர்பார்த்திருக்கும் மருத்துவபீட மாணவர்கள் இன்று (27-03-1993) காலையில் எனது பணிமனையில் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இப்படிக்கு,
வைத்திய கலாநிதி
செல்வி என். கனகரட்டினம்
அரசினர் போதனா வைத்தியசாலை, பணிப்பாளர்.
யாழ்ப்பாணம். (சி/6277)

நடமாடும் வைத்தியசேவைக்கான

## வைத்திய அதிகாரி

மேற்படி வைத்திய அதிகாரிகளுக்கான விண்ணப்பங்கள் வைத்தியத்துறையில் தேர்ச்சிபெற்ற அனுபவம் வாய்ந்த [M. B. B. S.] [R. M. P.] இளைப்பாறியவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பப் படிவத்துடன் 12-04-93 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் அமைந்துள்ளஎமது ஸ்தாபன பணிமனைக்கு நேர்முகப் பரீட்சைக்கு நேரில் சமுகம் தரவும்.

வேதனம் ரூபா 6000/- தொடக்கம் 8000/- வரை வேறு படிகள் வழங்கப்படமாட்டாது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
கிளிநொச்சிக் கிளை,
கிளிநொச்சி மாவட்டம்.
(சி-6276)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

---

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க

## அறிவித்தல்

சங்கத்தில் தையல், தமிழ் தட்டச்சு பயிற்சி பெற விரும்பும் பெண் பிள்ளைகள் அதற்கான விண்ணப்ப படிவங்களை ரூபா 25/- செலுத்தி 15-04-93 க்கு முன் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

இல. 71, கே. கே. எஸ் வீதி,
கொக்குவில். (சி-6275)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## அறிவித்தல்

எதிர்வரும் 30. 3. 93 செவ்வாய் அன்னை பூபதி பொது அறிவுப் போட்டி நடைபெறவுள்ளமையினால் அன்றையதினம் மாலை வகுப்புக்களை நடாத்தாது நிறுத்தி ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம். அன்னை பூபதி அவர்களின் உருவப்படம் தேவைப்படும் கல்வி நிறுவனங்கள் அந்த அந்த கல்விக்கோட்ட நிர்வாகிகளிடம் பெற்றுக்கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

[சி/6272] பொதுச்செயலாளர்

ஓம்
யாழ். மாவட்ட
இந்து இளைஞர் பேரவை
இந்து இளைஞர் மன்றங்களை

## பதிவு செய்தல் 1993

யாழ். மாவட்டத்தில் பாடசாலைகள், ஆலயங்கள், கிராமங்கள் மற்றும் சகல இடங்களிலும் செயற்படும் பேரவையில் ஏற்கனவே பதிவு செய்த, பதிவு செய்யாத சகல இந்து இளைஞர் அமைப்புக்களும், இந்து தொண்டர் அமைப்புக்களும் தத்தமது தற்போதைய நிர்வாகிகளின் பெயர், நிரந்தர, இடம்பெயர்ந்த முகவரிகள். தற்போதைய செயற்பாடுகள் பற்றிய விபரங்களை எதிர்வரும் ஏப்பிரல் மாதம் ஒன்பதாம் (9) திகதிக்கு முன்னர்

''பொதுச் செயலாளர், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, நல்லை ஆதீனம், நல்லூர்''

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படியும் (கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில், இந்து இளைஞர் மன்றப் பதிவு 1993 எனக் குறிப்பிடவும்) மன்றங்கள் செயற்பாட்டில் இல்லாத இடங்களில் புதிய மன்றங்கள், புதிய நிர்வாகங்களை அமைத்து விபரங்களை அனுப்பி வைக்கும்படியும் இத்தால் வேண்டப்படுகின்றனர்.

வணக்கம்

வே. கெ. தனபாலன்
தலைவர்

ப. சிவலோகநாதன்
பொதுச்செயலாளர்

சி. சி. வரதராசா
நிர்வாகச் செயலாளர்

த. இ. பாலசுந்தரம்
பொருளாளர்

(சி/6268)

## நினைவு கூருகின்றோம்...

### 1993-03-27

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய ★ பாக்கியன் (சோமநாதன் பாக்கியராசா-காரைதீவு,

13940 மூன்று புகைப்படங்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் அடையாள அட்டையிலுள்ள முகவரிக்கோ அல்லது ராஜன் புத்தகசாலை 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம் முகவரியில் ஒப்படைக்கவும். தக்க சன்மானம் வழங்கப்படும். (4077)

லிங்கம் கூல்பாரிற்கும் - பெருமாள் கோயிலுக்குமிடையில் தொழில் அடையாளஅட்டை. கல்லூரி அனுமதி அட்டை வங்கி ஆவணங்கள் சிறு தொகைப்பணம் என்பனவற்றுடன் மணிபர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லிங்கம் கூல்பாரில் கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-6274)

## பாதுகாத்துக் கொள்ளுங்கள்

பெறுமதிமிக்க உங்கள் வீடியோ படக்காட்டுக்கள் பங்கஸ், தூசி படிந்துள்ளதா? மேலும் படிந்து பழுதடையமுன் அதற்கென தயாரிக்கப்பட்ட கருவி மூலம் சிறந்த முறையில் துப்புரவு செய்து கொள்ள வீடியோ ஸ்ரார் இல. 7/6, பிறவுண் வீதி, முதலாம் லேன். யாழ்ப்பாணம். (4481)



## அருமைத்துரை தர்மராசா

(நிமலன்)

தென்மராட்சி பேக்கரி உரிமையாளர் சங்க - உபசெயலாளர்)

மலர்வு: 01-03-1973 | உதிர்வு: 25-02 1993

விதி செய்த சதியோ நிமலா
மின்னலென உமைப் பிரிந்தோம்
யாருமே எதிர் பார்த்திராத - ஓர்
தவிப்பு உன் இழப்பு
ஆறாது, மாறாது என்றென்றும்
உன் நினைவு.

உன்பிரிவால் வாடும்

குடும்பத்தினர், உறவினர்கள். | அம்பாள் பேக்கரி ஊழியர்கள்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுலம் (4570)

களிடம் இருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பப் படிவத்துடன் 12-04-93 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் அமைந்துள்ளஎமது ஸ்தாபன பணிமனைக்கு நேர்முகப் பரீட்சைக்கு நேரில் சமுகம் தரவும்.

வேதனம் ரூபா 6000/- தொடக்கம் 8000/-வரை வேறு படிகள் வழங்கப்படமாட்டாது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
கிளிநொச்சிக் கிளை,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-6276)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தற்காலிக பொது முகாமையாளராக திரு. சு. ஜெயக்குமாரன் 24-03-1993 இல் இருந்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை சபையின் சார்பில் தெரியப்படுத்திக் கொள்ளப் படுகின்றது.

க. சிவானந்தமூர்த்தி,
கௌரவ செயலாளர்,
இயக்குனர்சபை சார்பாக.

(சி-6278)

உறையில் இடதுபக்க மேல் மூலையில், இந்து இளைஞர் மன்றப் பதிவு 1993 எனக் குறிப்பிடவும்) மன்றங்கள் செயற்பாட்டில் இல்லாத இடங்களில் புதிய மன்றங்கள், புதிய நிர்வாகங்களை அமைத்து விபரங்களை அனுப்பி வைக்கும்படியும் இத்தால் வேண்டப்படுகின்றனர்.

வணக்கம்

வே. கெ. தனபாலன் — தலைவர்
ப. சிவலோகநாதன் — பொதுச்செயலாளர்
சி. சி. வரதராசா — நிர்வாகச் செயலாளர்
த. இ. பாலசுந்தரம் — பொருளாளர்

(சி/6268)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-27

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய
★ பாக்கியன் (சோமநாதன் பாக்கியராசா-காரைதீவு, கல்முனை - அம்பாறை)

1986 ஆம் ஆண்டு பரந்தனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய
கார்த்திக் (கந்தையா ஜெயந்தன் - 3ம் வட்டாரம், முள்ளியவளை-முல்லைத்தீவு)

1988 ஆம் ஆண்டு பாலக்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் வீரச்சாவெய்திய
கப்டன் தீபன் (கந்தையா தவராசா-சந்திவெளி-மட்டு)

லெப். ரமணி

கிளிநொச்சியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய
2ம் லெப். ஆனந்தன் [நவரத்தினம் அன்பழகன்-புவனேஸ்வரி அம்பாள்வீதி, நல்லூர் கிழக்கு யாழ்]
தனேந்திரன்/மேரிதாஸ் [சவரிப்பிள்ளை அன்ரன் கிறிஸ்ரினோல்ட் - மாரிசன்கூடல், இளவாலை-யாழ்]

1989 ஆம் ஆண்டு மடுவீதியில் பேருந்தில் பயணம் செய்கையில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய
மன்னார் பிராந்திய பொதுக்குழு உறுப்பினர்
★ சில்வா [அன்ரன் சதாகாயம் சில்வா-பெரியநாவற்குளம் - மன்னார்]
★ அஜித் [சௌந்தரராஜா செல்வராஜா-வட்டிப்பித்தான்மடு-மன்னார்]

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் பின்னர் வீரச்சாவெய்திய
சுபன் [இராமநாதன் செல்வேஸ்வரன்-கெற்பலி-மிருசுவில்]

1992 ஆம் ஆண்டு 21-03-1992 அன்று வவுனியா-நொச்சிமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய
லெப். அகிலன் [சிவசுப்பிரமணியம் சூரியகுமார்-பம்பைமடு-வவுனியா]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்கள்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6270)

# இன்று அரங்கேறுகின்றது

**திருகோணமலைமாவட்ட இடம்பெயர்ந்தகலைஞர்களின்வளர்ச்சிக்காக**

திருமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்களும், யாழ். மாவட்ட கலைஞர்களும் இணைந்து வழங்கும்

**நவாலியூர் சி. என். செல்லத்துரையின்**

# தாயக மண்

கற்பனை கலந்த சரித்திர நாடகம்
(சமூக பொருளாதார வளர்ச்சித்திட்டத்தின் ஆதரவில்)

**காலம்: 27. 03. 93** சனிக்கிழமை [இன்று] **நேரம்: பிற்பகல் 3. 30 மணி**

**இடம்: யாழ்/இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்**

அன்பளிப்புக் கட்டணம்: 25/-, 15/- [மண்டபவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்]

அன்பளிப்பு:
❋ நவீனரக ஆடைகளை உங்கள் ரசனைக்கேற்ப தைத்துத் தருபவர்கள்
**- கிறீன் சியஸ் ரெயிலறிங் -**
இல. 11, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(4551)

நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

கடந்து முடிந்ததும், உதவ முடியாததும் பற்றி கவலைப்பட்டு வருந்திப் பயனில்லை.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## தமிழ்க்குழுக்களின் ஒப்பாரி

சிங்கள அரசியல் கட்சிகள் ஏமாற்றி விட்டன. வலுக்கட்டாயமாக தமிழர்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்க முற்பட்டுள்ளன. இனப்பிரச்சினையைத் தீர்க்க சர்வதேச மத்தியஸ்தம் தேவை. இவை இன்றைய கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகளின் கூக்குரல். இதனை ஒப்பாரி என்று வேண்டுமானாலும் சொல்லலாம்.

ஆனால், இலங்கையின் அரசியல் வரலாற்றில் இது ஒன்றும் புதிதல்ல. சிங்கள அரசியல் கட்சிகளும், சிங்கள அரசியல் தலைவர்களும் காலம் காலமாகத் தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கைகளே இவை. இதில் சிங்களவரிடம் கட்சி வேறுபாடோ அன்றி தலைவர்கள் இடத்தில் வேறுபாடோ இருக்கவில்லை.

தமிழர்களைக் கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஏமாற்றியது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஏமாற்றியது. அதேபோன்று இக் கட்சிகளுக்கு காலத்திற்குக் காலம் தலைமை தாங்கிய தலைவர்களும் ஏமாற்றினார்கள். இதில், டட்லி சேனநாயக்காவாக இருந்தாலென்ன, சேர் ஜோன் கொத்தலாவலையாக இருந்தாலென்ன, பண்டாரநாயக்காவானாலும் சரி, சிறிமாவோ பண்டாரநாயக்கவாக இருந்தாலும் சரி, அதன்பின்பு ஜே. ஆர். ஜெயவர்த்தனவாக இருந்தாலும் என்ன? இன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவாக இருந்தாலும் என்ன? சகல சிங்களத் தலைவர்களும் தமிழர்களை ஏமாற்றியே வந்துள்ளனர்.

தமிழர்களின் வரலாறும் ஏமாந்த வரலாறாகவே இருந்தது. இதில், விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தைத் தவிர வேறு எவரும்தப்பவில்லை. இதேவேளை, தமிழரின் கோரிக்கைகளும் காலத்திற்குக் காலம் படிப்படியாக பலவீனப்பட்டே போனது. ஆரம்பத்தில் ஐம்பதுக்கைம்பது கோரியவர்கள் பின்னர் மாகாண சபைகள் என்றும் மாவட்ட சபைகள் எனவும் கோரிக்கைகளை முன்வைக்கும் அளவிற்கு இறங்கி வந்தார்கள்.

இதற்கு பலவீனமான நிலையில் இருந்துகொண்டு ''தமிழ்த் தலைவர்கள்'' பேச்சு நடாத்தச் சென்றதே காரணமாக இருந்தது. அரசியல் நெருக்கடிகள் வரும்போது தமிழ்த்தலைவர்களைப் பேச்சுக்கு அழைப்பதும், பின்னர், நெருக்கடி தணியும் கட்டத்தில் அவர்களை ஏமாற்றுவதும், ஒப்பந்தங்களைக் கிழித்தெறிவதும், சிங்களக் கட்சிகளிடம் வழமையாக இருந்தது. ஆனால், இவ்வாறான ஏமாற்றங்களின் பின்னரும், ''தமிழ்த் தலைவர்கள்'' சிங்...

### இனப்பிரச்சினை தீர்விற்கு

# மாகாணசபை தேர்தலில் அங்கீகாரம் பெறவேண்டும்

### ஜனாதிபதி சொல்கிறார்

இனப்பிரச்சினைக்கு அரசு தீர்வு காண்பதற்கு மாகாண சபை தேர்தலில் மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்துள்ளார். இதற்கமைய சட்சியின் மாகாணசபைத் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளுமாறும் அவர் தனது கட்சிப் பிரமுகர்களை கேட்டுக்கொண்டார்.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள ஐ. தே. கட்சியின் தலைமைச் செயலகமான சிறிகோத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐ. தே.க. தேசிய நிர்வாகசபைக் கூட்டத்தில் பிரேமதாசா உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அங்கு தொடர்ந்து பேசிய ஜனாதிபதி பிரேமதாசா, ''தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைத்ததும் நிரந்தரமான தீர்வை அரசு நடைமுறைப் படுத்த மாகாணசபைத் தேர்தலில் மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்றும், மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. க பெறும்வெற்றி பொதுமக்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் என்பதை மக்களுக்கு உணரச் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைத்ததும் அரசு அது குறித்து இறுதி முடிவை எடுத்து அதை நடைமுறைப்படுத்த மக்கள் அங்கீகாரத்தைப் பெற ஆவன செய்யும்படி பிரேமதாசா தனது கட்சியினரை இக்கூட்டத்தில் வைத்து கேட்டுக்கொண்டார்.

## அதிரடிப்படை சிப்பாய் கடன் பணம் கொள்ளை

பொலிஸ் சேமிப்பு சங்கத்திலிருந்து கடன் பெற்று சென்ற அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் அப்பணத்தை கொள்ளையரிடம் இழந்த சம்பவம்ஒன்று கடந்த செவ்வாயன்று கொழும்பில் நடைபெற்றது.

கொம்பனித் தெருவிலுள்ள மேற்படி பொலிஸ் சங்கத்திலிருந்து இவர் கடனாக 30 ஆயிரம் ரூபாவை பெற்று தனியார் பஸ்ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த போதேதிடீரென நுழைந்த கொள்ளையரிடம் தனது பணத்தை பறிகொடுத்தார்.

## பஸ்ஸில் சென்ற இருவர் கடத்தப்பட்டனர்

மட்டக்களப்பிலிருந்து சித்தாண்டிக்கு பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த இரு ரெலோ உறுப்பினர்கள் இனந்தெரியாத குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. மற்றும் ஒருவர் இச்சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுகாயத்திற்குள்ளானார்.

இச்சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது, மேற்படி பஸ்ஸில் மூன்று ரெலோ உறுப்பினர்கள் பயணம் செய்து கொண்டிருந்ததாகவும் இவர்கள் இனந்தெரியாத குழு ஒன்றினால் வழி மறிக்கப்பட்டு கடத்தப்பட்டதாகவும், இச்சம்பவத்தில் தப்பியோடிய மூன்றாமவர் அக்குழுவின் துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர் தற்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## பல்கலைக்கழக அனுமதி விசேட வெட்டுப்புள்ளி வாபஸ்

(யாழ்ப்பாணம்)

1990 இல் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சையின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கென நிர்ணயித்த விசேட வெட்டுப் புள்ளியை அரசாங்கம் விலக்கிக் கொண்டுள்ளதென பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அதி வண. சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இவ்விசேட வெட்டுப் புள்ளியினால் பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டதை அடுத்து இதனை எதிர்த்து கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இவ்விசேட வெட்டுப்புள்ளி நீக்கப்பட்டதையடுத்து கூடுதலான தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஈராக்கிற்கு மேலாக ஐ.நாவின் வேவு விமானம்!

(வாஷிங்டன்)

ஈராக்கை வேவு பார்ப்பதற்காக ஐ. நா வேவு விமானம் ஒன்றை பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. இந்த வேவு விமானத்தை அமெரிக்கா ஐ.நாவிற்கு வழங்கியுள்ளது.

இந்த வேவு விமானம் ஈராக்கிற்கு மேல் பறந்து வேவு பார்ப்பதாகவும் அந்த ஐ.நா அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கூட்டு நீடித்தால் புலி இல்லை முறிந்தால் ஊடுருவல் புரளி

அ. தி. மு. க. உறுப்பினர் குற்றச்சாட்டு

## ஆடைத்தொழிற்சாலை வேலை நிறுத்தம்

(கொழும்பு)

நுனுகம்வேர பீடொன் ஆடை தொழிற்சாலை ஜனவரி, பெப்ரவரி மாத சம்பளம் கிடைக்காமையினால் ஊழியர் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

1992 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட மேற்படி ஆடைத் தொழிற்சாலையில் இரண்டு மாதம் சம்பளம் கிடைக்காமையினால் ஊழியர்கள் 23ஆம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தம் செய்தனர்.

இவர்களின் வேலை நிறுத்தத்தை தொடர்ந்து நிர்வாகம் நேற்று முன்தினம் காலை சம்பளத்தை ரூபா 500/- மட்டும் கொடுத்தது. இதனால் ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே பதற்றம் நிலவியது. இதனை தொடர்ந்து பொலீஸார் வரவழைக்கப்பட்டனர்.

அதன் பின்னர் மாலையில் அவர்களுக்கான முழுசம்பளமும் கொடுக்கப்பட்டது.

## மருதடி ஆலயத்தில் விசேட கருமபீடம்

கடந்த வருடங்களைப் போன்று இம்முறையும் இலங்கைவங்கி மானிப்பாய் கிளையின் ஒரு விசேட கருமபீடம் மானிப்பாய் மருதடி விநாயக ஆலய உற்சவகாலத்தில் செயற்படும். இம்முறை 29-ம்திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் இக்கருமபீடம் ஆலய தர்மகர்த்தா திரு. எஸ். சிவகுருநாதன் அவர்களால் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்படும்.

இவ்வைபவத்தில் இலங்கை வங்கியின் மாவட்டக் காரியாலயம் மற்றும் இலங்கைவங்கிகளையைச் சார்ந்த மூத்த அதிகாரிகள் கலந்துகொள்வர்.

## மாவீரர் ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை மாவீரர்கள் ஞாபகார்த்தமாக ஏப்ரல் 13, 14 ஆம் திகதிகளில் தீருவில் மைதானத்தில் விளையாட்டு விழா நடைபெறவுள்ளது.

இரண்டு தினங்கள் நடைபெறவிருக்கும் இவ் விளையாட்டு விழாவில் 15 மைல் ஆண்கள் மரதன் ஓட்டம், கழகங்களுக்கிடையில் அஞ்சல் ஓட்டம், குத்துச் சண்டை, மல்யுத்தம், கை மடித்தல், கம்பு இழுத்தல், தலையணை சண்டை, பெண்கள் - ஆண்களுக்கான கயிறு இழுத்தல் ஆகிய விளையாட்டுக்கள் நடாத்த ஏற்பாடாகியுள்ளன.

இவ் விளையாட்டுக்களில் பங்கு பற்ற விரும்பும் வீரர்கள் ஏப்ரல். 12 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு முன்னதாக வல்வெட்டித்துறை சந்தியில் உள்ள 'ரேட் சென்ரர்' உரிமையாளரிடம் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். (யோ)

### சுகாதார பட்டிமன்றம்

யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கு சுகாதாரப் பிரச்சினைகளை துல்லியமாக எடுத்துக் கூறுவதற்கு இது தொடர்பான பட்டிமன்றங்களையும், கூத்துக்களையும் நடத்த யாழ் மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் தற்போது நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றார்கள் என யாழ்மாநகர சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. பி.சிவலிங்கம்அவர்கள் தெரிவித்துள்ளார்

### பிரிட்டன் உதவி

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு பிரிட்டன் தூதரகம் விளையாட்டு உப...

### இலவச வைத்தியசாலை

மட்டுவில் பன்றித்தலைச்சி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஆலயத்தில் வரும் அடியார்களின் நன்மைகருதி சாவகச்சேரிபிரதேச சபைச் செயலாளர்ரால் கடந்த 22 ஆம் திகதி காலை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. (24)

### யானை தொல்லை

கிளிநொச்சி ஊற்றுப்புலம் குடியேற்றத் திட்டத்தில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் அங்குள்ள குடியேற்ற வாசிகள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. (14)

### பரீட்சைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சகல பாடசாலைகளிலும் இம்மாதம் 29-ம் திகதி தொடக்கம் முதலாம் தவணைப் பரீட்சை ஆரம்பமாகும் என...

ழர்களை ஏமாற்றியே வந்துள்ளனர்.

தமிழர்களின் வரலாறும் ஏமாந்த வரலாறாகவே இருந்தது. இதில், விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தைத் தவிர வேறு எவரும்தப்பவில்லை. இதேவேளை, தமிழரின் கோரிக்கைகளும் காலத்திற்குக் காலம் படிப்படியாக பலவீனப்பட்டே போனது. ஆரம்பத்தில் ஐம்பதுக்கைம்பது கோரியவர்கள் பின்னர் மாகாண சபைகள் என்றும் மாவட்ட சபைகள் எனவும் கோரிக்கைகளை முன்வைக்கும் அளவிற்கு இறங்கி வந்தார்கள்.

இதற்கு பலவீனமான நிலையில் இருந்துகொண்டு ''தமிழ்த் தலைவர்கள்'' பேச்சு நடாத்தச் சென்றதே காரணமாக இருந்தது. அரசியல் நெருக்கடிகள் வரும்போது தமிழ்த்தலைவர்களைப் பேச்சுக்கு அழைப்பதும், பின்னர், நெருக்கடி தணியும் கட்டத்தில் அவர்களை ஏமாற்றுவதும், ஒப்பந்தங்களைக் கிழித்தெறிவதும், சிங்களக் கட்சிகளிடம் வழமையாக இருந்தது. ஆனால், இவ்வாறான ஏமாற்றங்களின் பின்னரும், ''தமிழ்த் தலைவர்கள்'' சிங்களத் தலைவர்களுடன் பேச்சு நடாத்தச் சென்றனர். ஆனால் அவர்களை இவர்கள் முழுமையாக நம்பிச் செல்லவில்லை. தமது அரசியல் நலம் கருதியே சென்றனர்.

ஆனால், விடுதலைப் புலிகள் சிங்களப் பேரினவாதக் கட்சிகளை முன்னரே நன்கு புரிந்து கொண்டனர். 14 மாத பேச்சுவார்த்தையில் சிங்கள அரசாங்கம் எதையும் தமிழருக்குத் தர தயாராக இல்லை என்பதைத் தெளிவாக உணர்த்தினர். இதனால், பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறினர். இது வரலாற்றை மாற்றியது. இது சிங்கள அரசிற்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. புலிகளை ஏமாற்ற முடியவில்லை என்பதனால், புலிகள் தம்மை ஏமாற்றி விட்டதாக குற்றப் பத்திரிகை வாசித்தது.

ஆனால், சிங்களப் பேரினவாதக் கட்சிகள் புரிந்த இனப்படுகொலையும், அவற்றின் கடந்த காலவரலாற்றையும் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் தெரிந்து கொண்டும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம், பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம் என சிங்கள அரசுடன் பேச்சுக்கள் நடாத்தச் சென்றன. சிங்களவருடன் சேர்ந்து தமிழர்களை ஏமாற்ற முற்பட்டன. அத்தோடு இக்குழுக்கள் கொண்டிருந்த புலிகள்எதிர்ப்புக் கொள்கையானது இராணுவத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி தமிழ் இனத்தையே காட்டிக் கொடுக்கும் அளவிற்குச் சென்றது. இதனை பேரினவாதத் தலைமைத்துவமும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

தற்பொழுது தேர்தல் சமயத்தில், மீண்டும் வழமைபோல் தமது உண்மைச் சொரூபத்தைச் சிங்களக் கட்சிகள் காட்டியுள்ளன. இதையிட்டே இன்று தமிழ்க் குழுக்கள் பெரும் ஒப்பாரி வைக்கின்றன. ஆனால், இவர்களின் இந்த ஒப்பாரி வெறும் கண்துடைப்பாகும். சிங்கள இராணுவத்துடனும், இந்திய இராணுவத்துடனும் இணைந்து நின்று தமிழர் படுகொலைக்குக் காரணமான இக்குழுக்கள் இன்று வைக்கும் இந்த ஒப்பாரியானது சிங்கள அரசுடன் இணைந்து மேற்கொள்ளும் ஒரு சதி நடவடிக்கையாகும். அவ்வாறு இல்லாவிடில், சர்வதேச மத்தியத்தத்தை கோரும் இக்குழுக்கள் ஏன் சிங்கள இராணுவத்துடன் இன்னமும் சேர்ந்து செயற்பட வேண்டும், இனப்படுகொலைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்?.

---

யித்த விசேட வெட்டுப் புள்ளியை அரசாங்கம் விலக்கிக் கொண்டுள்ளதென பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அதி வண. சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இவ்விசேட வெட்டுப் புள்ளி வழங்குவதற்காகல் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இவ்விசேட வெட்டுப்புள்ளி நீக்கப்பட்டதையடுத்து கூடுதலான தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றாமவர் அக்குழுவின் துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர் தற்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

---

# ஈராக்கிற்கு மேலாக ஐ.நாவின் வேவு விமானம்!

(வாஷிங்டன்)

ஈராக்கை வேவு பார்ப்பதற்காக ஐ. நா வேவு விமானம் ஒன்றை பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. இந்த வேவு விமானத்தை அமெரிக்கா ஐ.நாவிற்கு வழங்கியுள்ளது.

ஈராக்கில் உள்ள அணுஆயுத தொழிற்சாலைகள் என சந்தேகிக்கப்படும் கட்டடங்களை படம்பிடிக்க ஐ.நா இந்தவேவு விமானத்தை பயன்படுத்துகின்றது என ஈராக் தொடர்பான ஐ.நா குழுவின் அதிகாரி ஒருவர் வாஷிங்டனில் தெரிவித்தார்.

அமெரிக்கா வழங்கிய இந்த வேவு விமானம் சவுதி அரேபியாவில் தரித்து நிற்பதாகவும் வாரத்திற்கு மூன்று தடவை இந்த வேவு விமானம் ஈராக்கிற்கு மேல் பறந்து வேவு பார்ப்பதாகவும் அந்த ஐ.நா அதிகாரி மேலும் தெரிவித்தார்.

---

## 25 லட்சம் ரூபா நஷ்டம்

[சென்னை]

நேற்று முன்தினம் கோயம்புத்தூரில தி.மு.க மாநாட்டு பந்தல் தீயினால் நாசமானதில் 25 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த பல மின்சார உபகரணங்களும் சேதமாகி விட்டன.

---

## கூட்டு நீடித்தால் புலி இல்லை முறிந்தால் ஊடுருவல் புரளி

### அ. தி. மு. க. உறுப்பினர் குற்றச்சாட்டு

(சென்னை)

''கூட்டணி வேண்டும் என்றால் புலிகள் இல்லை என்றும் கூட்டணி முறிந்ததும் தமிழகத்தில் புலி நடமாட்டம் என்றும் காங்கிரசார் சொல்கின்றனர். இது சந்தர்ப்பவாத அரசியல்'' என இந்திராகாங்கிரசை குற்றஞ் சாட்டினார் நெல்லைத் தொகுதி அ. தி. மு. க. உறுப்பினர் வேலையா.

தமிழக சட்டசபையில் பட்ஜட் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் ''கூட்டணிவேண்டுமென்றால் விடுதலைப் புலி இல்லை என்பார்கள் கூட்டணி பருப்பு வேகாது என்றதும் புலிகள் வந்துவிட்டார்கள் என்கிறார்கள்'' எனக் குறிப்பிட்டார்.

புலிகள் வந்துவிட்டனர் என்று வைத்தால் கூட கடற்படை மத்திய அரசிடம்தானே உள்ளது. உங்களுக்குத் தெரியாமல் அவர்கள் எப்படி வர முடியும்? என்றும் கேள்வி எழுப்பினார் அ. தி. மு. க. உறுப்பினர் வேலையா.

இதற்கு பதிலளித்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் ஞான சேகரன், ''விடுதலைப்புலிகள் தமிழகத்தில்இல்லை என்றால் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏன் ஏ. கே—47 துப்பாக்கிகள் தாங்கிய கறுப்புப் பூனைப்படை? இன்னும் புலிப் பயம் இருப்பதால்தானே விசேஷபாதுகாப்பும் இருக்கின்றது என்றாராம். இதற்கு அ. தி. மு. க. தரப்பிலிருந்து கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் முத்துசாமி குறுக்கிட்டு 'அப்படியானால் பிரதமர் ராவ் பாதுகாப்பில்லாமல்தான் போகின்றாரா அவர்கள் பாதுகாப்பு வைத்திருப்பதால்டில்லியில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று தாங்கள் கூறலாமா? என்று கேள்வி எழுப்பினார். குண்டுவெடித்த பின்பு நாம் போவதில்லை குண்டு வெடிக்கும் முன்பே பாதுகாக்கின்றோம் என்றும் அமைச்சர் முத்துசாமி குறிப்பிட்டார்.

---

## பந்தல் தீ பிடித்தாலும் மாநாடு நடைபெற்றது

(சென்னை)

தி.மு.கவின் கோவை மாநாட்டு மண்டபம் தீக்கிரையாக்கப்பட்ட போதிலும் மூன்று நாள் மாநாடு திட்டமிட்டபடி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. திட்டமிட்டிருந்தது போன்று பேரணி, கூட்டம் நடைபெறும் என தி.மு.க தலைவர் கருணாநிதி அறிவித்தார்.

தீயினால் சேதமடைந்த பகுதிகளை பார்வையிட்ட கருணாநிதி பின்னர் செய்தியாளர்களிடையே பேசிய போது, தீ ஏற்பட்ட சமயம் பந்தலுக்கு மின்விநியோகம் கூட வழங்கப்பட்டிருக்கவில்லை எனவேஇது திட்டமிட்ட சதியே என்றார்.

இதே சமயம் மாநாட்டிற்காக சிதம்பரம் பூங்கா முன்பு அமைக்கப்பட்டிருந்த பெரும் வளைவு ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்துமாறு தமிழக அரசை கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

---

சவுதி–குவைத் நீளத்திற்கு

## பாலைவனத்தின் கீழ் புராதன ஆற்றுப்படுக்கை

(லண்டன்)

அரேபிய பாலைவனத்தின் கீழ் பாரிய நீர்தேக்கம் ஒன்று விரைவில் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பொஸ்ரன் பல்கலைக்கழக புவியியல் ஆய்வாளர் பாருக். எல். அபாஸ் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

மேற்கு சவுதி அரேபியா முதல் குவைத் வரையிலான நீளத்திற்கு புராதன ஆற்றுப் படுக்கை ஒன்று நிலத்தின் கீழ் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த ஆற்றுபடுக்கை வற்றிவிட்டதாக பேராசிரியர் அபாஸ் குறிப்பிட்டுள்ளார்.

வளைகுடாப் போரின் போது பாலைவனத்தை செய்மதிகள் படம்பிடித்தபோது இந்த ஆற்றுப்படுக்கை தரையின் கீழ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாலைவன மண்ணினால் இப்பகுதி அதிகமாக மூடப்பட்டுள்ளதால் கீழ்தரை அமைப்பை தெளிவாக இப்போது வரையறுக்க முடியாது உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

ஆகிய விளையாட்டுக்கள்

## சுகாதார பட்டிமன்றம்

யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கு சுகாதாரப் பிரச்சினைகளை துல்லியமாக எடுத்துக் கூறுவதற்கு இது தொடர்பான பட்டிமன்றங்களையும், கூத்துக்களையும் நடத்த யாழ் மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் தற்போது நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றார்கள் என யாழ்மாநகர சுகாதாரக் கல்வி அதிகாரி திரு.பி.சிவலிங்கம்அவர்கள் தெரிவித்துள்ளார்

## பிரிட்டன் உதவி

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு பிரிட்டன் தூதரகம் விளையாட்டு உபகரணங்கள் சிலவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. கிரிக்கட் ஆடுகளஉருளை, பயிற்சிக்கான பத்து கொங்கோஇன உதைபந்துகள், போட்டிக்கான ஐந்து மிக்காச இன உதைபந்துகள் என்பனவே வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் ஆகும்.

## புதிய டாக்டர்கள்

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு இரண்டு டாக்டர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பேராதனை பல்கலைக் கழகத்தில் மருத்துவ படிப்பை முடித்து வெளியேறியவர்களே இவ்வாறு நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவ் வைத்திய சாலைக்கு நியமனம் செய்யப்பட்ட திரு. பொன்னம்பலம் சிவானந்தன், திருமதி சிவானந்தன்தேவகி ஆகிய இருவரும் 'வாதுவ' கப்பல் மூலம் இங்கு வந்தனர். (யோ)

## நாட்டுக்கூத்து அரங்கேற்றம்

தீவக கலைஞர்கள் இணைந்து வழங்கும் மதுரகவிப் புலவர் திரு. ம. செல்வராசா அவர்களால் பாடப்பட்ட ''பண்டாரவன்னியன்'' நாட்டுக் கூத்தின் அரங்கேற்றவிழா இன்று சனிக்கிழமை மாலை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறும். (22)

## தவக்கால போட்டிகள்

குருநகர் சென் றோக்ஸ் இளைய தலைமுறைக் கழகத்தினர் தவக்காலத்தைச் சித்திரிக்கும் பேச்சு, ஓவிய, கவிதை கட்டுரை, பசான் ஓதுதல் ஆகிய போட்டிகளைப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்த உள்ளார்கள்.

ஆண்டு ரீதியாக மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட உள்ள இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 31-03-93 ஆகும்.

---

நன்மைகருதி சாவகச்சேரிபிரதேச சபைச் செயலாளர்ரால் கடந்த 22 ஆம் திகதி காலை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. (24)

## யானை தொல்லை

கிளிநொச்சி ஊற்றுப்புலம் குடியேற்றத் திட்டத்தில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் அங்குள்ள குடியேற்ற வாசிகள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. (14)

## பரீட்சைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சகல பாடசாலைகளிலும் இம்மாதம் 29-ம் திகதி தொடக்கம் முதலாம் தவணைப் பரீட்சை ஆரம்பமாகும் என தெரியவருகின்றது. (22)

## விளையாட்டு

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடாத்தப்படும் குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில், நேற்றுமுன்தினம் அரியாலையில் நடைபெற்ற அரை இறுதிப்போட்டியில் முதலில் குருநகர் பாடுமீன் அணி, அரியாலை அணியை 7:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டியுள்ளது.

அடுத்த அரை இறுதி ஆட்டத்தில் குருநகர் சென்றோக்ஸ் அணியினர்நாவாந்துறை சென் நிக்கலஸ் அணியை 2:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டினர்.

❋

வடமராட்சி கோட்ட மட்டத்தில் அண்மையில் நடைபெற்ற 15 வயதிற்குட்பட்ட மாணவர்களின் உடற்பயிற்சிப் போட்டியில், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம் 1-ம் இடத்தையும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி 2-ம் இடத்தையும், நாகர் கோவில் அ.மி. த. க. பாடசாலை 3-ம் இடத்தையும் பெற்றுள்ளது. (30)

❋

யாழ்ப்பாண கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்ட போட்டியில் 17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான இறுதிப் போட்டியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் அதனை எதிர்த்துப் போட்டியிட்ட யாழ். பரியோவான் கல்லூரி அணியை 2-1 என்ற செற்கணக்கில் வென்று சம்பியன் ஆகியுள்ளது.

19 வயதுக்குட்பட்ட போட்டியில் யாழ். பரியோவான் கல்லூரி அதனை எதிர்த்து ஆடிய யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியை இருநேர் செற்களில் வென்று சம்பியனாகியுள்ளது. (17)

ஈழநாதம்

குண்டு வெடிப்பை அடுத்து

# பாக்கு நீரிணையில் ரோந்து அதிகரிப்பு

(கொழும்பு)

பம்பாய், கல்கத்தா குண்டு வெடிப்பு சம்பவங்களைத் தொடர்ந்து இந்தியக் கடற்படையினர் பாக்கு நீரிணையில் தமது ரோந்து நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்தியிருப்பதாக கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையக வட்டாரங்கள் கூறியுள்ளன.

வழமைக்கு மாறான வகையில் இந்தியக் கடற்படைக் கப்பல்கள் பல, இலங்கை - இந்திய கடல் எல்லையில் காணப்படுவதாகவும், இது பாக்கு நீரிணையில் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதாக இருப்பதாகவும் கூட்டுப்படை வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

## என்றும் எம்நெஞ்சில் வாழ்ந்திருவாய்

தேசத்தின் விடியலுக்காய் உயிர்துறந்தாள் — எங்கள்
தாயகத்தின் தாயாகி நின்றாள்
பாசத்தை மண்மீது வைத்தாள் — என்றும்
பாரினிலே பூபதித்தாய் மிளிர்வாள்.

உண்ணாது உடல்வருத்தி உயிரினையே — எங்கள்
கண்ணான மண்ணுக்கு அர்ப்பணித்தாள்
எண்ணமதில் தமிழ் உணர்வில் நின்றவளே — நீ
என்றும் எம்நெஞ்சில் வாழ்ந்திடுவாய்.

சத்தியப் போரினில் நீ குதித்தாய் — எங்கள்
சந்ததி வாழ்ந்திட நீ மடிந்தாய்
எத்திக்கும் உன்நாமம் நின்றிடுமே — எங்கள்
அன்னை உன்வழியில் தொடர்ந்திடுவோம்!

— அரியாலையூர் கேந்திரன்

# ஜனாதிபதிமுறையை ஒழிக்க ஜனாதிபதி ஆவேன்

-சிறிமாவோ சூளுரை

(கொழும்பு)

''எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடுவேன். ஜனாதிபதி தேர்தலில் நான் குதிப்பது பதவிஆசையினால்அல்ல. நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தபின் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவேன்'' என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடையில் மக்கள் ஐக்கிய முன்னணியின் இரண்டாவது பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர், ஏகாதிபத்திய ஜனாதிபதி முறையை ஒழித்து மக்களுக்கு பொறுப்பு வாய்ந்த பாராளுமன்ற முறையைஏற்படுத்திய பின்பே ஓய்வு பெறுவேன் என சூளுரைத்தார்.

## 75 தமிழர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த 75 தமிழர்கள் கடந்த சனியன்று பொலீசாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 65 பேர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் இருவர் பெண்கள் ஆவர். விசாரணைகள் விசேட பொலீஸ் குழு ஒன்றினால் விசாரிக்கப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.


ஸ்ரீதர் திரையரங்கில்...

"தமிழோசை"

தினசரி மாலை

4 மணிக்கும் 6 மணிக்கும்

காண்பிக்கப்படுகிறது

(இ/6149)


## வீரவணக்க கூட்டம்

3-ஆம் மாதங்களில் (மார்ச்) வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வடமராட்சிக் கோட்ட பருத்தித்துறைவட்ட கடற்புலிகள் பிரதேசம் தவிர்ந்த ஏனைய மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் பருத்தித்துறை வியாபாரி மூலை, வண்ணாந்துறை பாடசாலையில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும்

இவ் வீரவணக்க நிகழ்விற்குரிய பதின்மூன்று மாவீரர்களின் நினைவுரைகளை, விடுதலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்கள் நிகழ்த்தவுள்ளனர். அத்துடன் கூட்டமுடிவில் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

[90] [யோ]

## கம்பன் விழா வெள்ளியன்று ஆரம்பம்

கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடாத்தப்பெறும் கம்பன் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் யாவும் துரிதகதியில் நடைபெற்றுவருகின்றன. கம்பனின் பட ஊர்வலத்துடன் ஆரம்பமாகும் இந்த விழாவில், மகரயாழ் விருது வழங்கல் மற்றும் தமிழ் அறிஞர்களுக்கான கௌரவ விருதுகள் வழங்கல், அமரர்கள் வித்துவான் சி. ஆறுமுகம், தேவன் - யாழ்ப்பாணம் ஆகியோர் ஞாபகார்த்த போட்டிகளில் பரிசு பெற்றோருக்கான விருது வழங்கல் மற்றும் பட்டிமண்டபம், கழலும் சொற்போர், கவியரங்கம், ஆய்வரங்கம், கருத்தரங்கு, வழக்காடுமன்றம், நாடக அரங்கு, நற்றமிழ் முற்றம், மேல் முறையீட்டு பட்டிமண்டபம், வில்லிசை போன்ற இலக்கிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## இனம்

இனந்தெரியாத ஆயுத நபர்களால் கடத்தப்படுவோர் குறித்து புகார் செய்ய பொது மக்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வருவதாகவும் தெரிவிககப்படுகிறது.

## மிதிவெடி

மாக சென்ற சிப்பாயே மேற்படி மிதி வெடிக்கு இலக்காகி பலியானார் என்று தெரிய வருகின்றது.

## தீர்வை

கின்றோம் என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் கூறுகையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைத்து ஒரே தமிழ் மாகாணம் அமைப்பது பற்றி பேச்சு நடத்த கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகள் தயாராக உள்ளபோதும் அரசாங்கம் அத்தகைய பேச்சுக்களுக்கு இடமளிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

## 7 சீன ஜெற்

யும் வழங்க சீனா முன்வந்துள்ளது. தற்போது, சிறிலங்கா விமானப்படை சுப்பர் சொனிக் பிரிவில் இரு எவ்

## அப்பியாசக் கொப்பிகள் அடுத்த மாதம் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கென யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்தினால் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் அடுத்த மாதத் தொடக்கத்தில் யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ளதாக யாழ் பிரதேச கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி அப்பியாசக் கொப்பிகள் தற்சமயம் கொழும்பு துறைமுகத்தில் வைத்து ''குமண'' கப்பலில் ஏற்றப்படுவதாகவும் தெரியவருகின்றது.

அண்மையில் கொழும்பு சென்ற யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (பா)

## இரண்டு ரெலோவினர் கடத்தல்

(மட்டக்களப்பு)

கடந்த புதன்கிழமையன்று மட்டக்களப்பிலிருந்து சித்தாண்டிக்கு பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த மூன்று ரெலோ உறுப்பினர்களில் இருவர் இனம் தெரியாத குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

மூன்றாவது நபர் தப்பியோடிய போது இனம் தெரியாத குழுவினர் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதனால் இவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ராவிற்கு எதிராக உண்ணா விரதம்

(இந்தியா)

இந்தியாவின்டில்லி நகருக்கு அருகே இன்று இந்திய காங்கிரஸ் மாநாட்டின்போது பிரதமர் நரசிம்மராவின் எதிர்ப்பாளர் உண்ணா விரதம் இருக்கப் போவதாகஅறிவித்துள்ளனர்.

கட்சியின் உள்ளேயேநரசிம்மராவுக்கு எதிரானநடவடிக்கை வலுவாகி வருவதை இது காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## அறிவித்தல்

மருத்துவபீட முதலாம் வருட மாணவன்

**ஞா. வில்சன் நிக்கலஸ்**

அவர்களின்

**மரணச் சடங்கு**

கடந்த 24-03-93 கிளாலிக் கரையில் ஷெல் தாக்குதலில் அகால மரணமடைந்த அன்னாரின் மரணச்சடங்கு 28-03-93 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இவரது ஆத்ம சாந்திக்கான திருப்பலிப்பூசை ஞாயிறு காலை 9-30 மணிமுதல் 11-30 மணிவரை புனித மரியாள் பேராலயத்தில் நடைபெறும். பின்னர் இவரது பூதவுடல்

## கண்ணீர்ப் பூக்கள்



## இறுதி வணக்கம்

தாயின் மடியில்

28
|
07



தாயக மண்ணில்

24
|
03

# "தமிழோசை"

(இ/614

தினசரி மாலை
4 மணிக்கும் 6 மணிக்கும்
காண்பிக்கப்படுகிறது

## அறிவித்தல்

மருத்துவபீட முதலாம் வருட மாணவன்

**ஞா. வில்சன் நிக்கலஸ்**

அவர்களின்

## மரணச் சடங்கு

கடந்த 24-03-93 கிளாலிக் கரையில் ஷெல் தாக்குதலில் அகால மரணமடைந்த அன்னாரின் மரணச்சடங்கு 28-03-93 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இவரது ஆத்ம சாந்திக்கான திருப்பலிப்பூசை ஞாயிறு காலை 9-30 மணிமுதல் 11-30 மணிவரை புனித மரியாள் பேராலயத்தில் நடைபெறும். பின்னர் இவரது பூதவுடல் நண்பகல் 12-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை பிரார்த்தனை, அஞ்சலிக்காக மருத்துவபீடத்திலும், தொடர்ந்து 2-15 — 3-15 மணி வரை பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அஞ்சலிக் கூட்டத்திற்காக வைக்கப் பட்டு, பின்னர் அனைத்துபீட மாணவர்களாலும் இறுதி ஊர்வலமாக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத் துச்செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும்.

குறிப்பு★ அனைத்துபீட மாணவர்களையும் தேவாலயத் தின் திருப்பலிப் பூசைக்கும் மருத்துவபீட. கைலாசபதி அரங்கு நிகழ்வுகளிற்கும் தவறாது சமுகம் தந்து சிறப் பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

★ அனைத்து பீடமாணவர்கள், பொதுமக்கள் அனைவரினதும் அஞ்சலி மருத்துவபீடத்திலும் இரங்கல் கூட்டம் மட்டுமே கைலாசபதி அரங்கிலும் நடைபெறும்.

மருத்துவபீட மாணவர் ஒன்றியம்
(M.S.U)

(சி-6280)

## மரண அறிவித்தல்

செல்வன்

**ஞானசூரியர் வில்சன் நிக்கலஸ்**

(யாழ். மருத்துவபீட முதலாம் வருட மாணவன்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் ஞானசூரியர் வில்சன் நிக்கலஸ் அவர்கள் அகால மரண மாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. இ. ஞானசூரியர் (ஆசிரியர்), திருமதி பவுலின் யுஸ்தினா ஞானசூரியர் ஆகியோரின் அன்பு மகனும். செல்வி மரியற் நிஷாந்தினி, செல்வன் நியூட்டன் அலோசியஸ் (லண்டன்), செல்வன் கனிசியஸ் நிக்கிலன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம்-முதலாம் வருடம்) ஆகியோரின் அன்புச் சகோதர னும், மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி. வண இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களின் அன்புப் பெறா மகனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இல. 58, கோவில் வீதி யில் அமைந்துள்ள இல்லத்திலிருந்து நாளை 28-03-93 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலி நிறை வேற்றப்பட்ட பின்பு அஞ்சலிக்காக யாழ். மருத் துவ பீடத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கிருந்து அன் னாரின் பூதவுடல் எடுத்துவரப்பட்டு மாலை 4-00மணிக்கு யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

இல. 58, கோவில் வீதி இ. மரியதாஸ் (மாமனார்)
யாழ்ப்பாணம். (4572) (ஓய்வு பெற்ற அதிபர்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம், இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம்ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

கோட்ட பருத்தித்துறைவட்ட கடற்புலிகள் பிரதேசம் தவிர்ந்த ஏனைய மாவீரர் களுக்கான வீரவணக்கக் கூட் டம் பருத்தித்துறை வியாபாரி மூலை, வண்ணாந்துறை பாட சாலையில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும்

இவ் வீரவணக்க நிகழ்விற் குரிய பதின்மூன்று மாவீரர் களின் நினைவுரைகளை, விடு தலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்கள் நிகழ்த்தவுள்ள னர். அத்துடன் கூட்டமுடிவில் விடுதலைப் புலிகள் கலைபண் பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

[90] [யோ]

### 7 சீன ஜெற்

யும் வழங்க சீனா முன்வந் துள்ளது. தற்போது, சிறி லங்கா விமானப்படை சுப்பர் சொனிக் பிரிவில் இரு எவ் ரி - 5 ரக பயிற்சி விமானங் கள், ஒரு எவ். ரி-7 சண்டை விமானம் (பயிற்சிக்கு உப யோகப்படுத்தப்படுகிறது) தாக்குதல் நடவடிக்கையில் மிகவும் உபயோகத்துக்கு உரி யன என்று கருதப்படும் எவ்- 7 ரக விமானங்கள் 4 ஆகியன பாவனையில் உள்ளன.

### விண்ணப்ப

பரீட்சைத் திணைக்களத்திற்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்க தாம் ஏற்பாடுகளை செய்வதாகவும் யாழ். பிர தேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார் (பா)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

விஞ்ஞானத்தில் முதலாம் அரையாண் டுப் பரீட்சை – 1992

முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டு [முதலா வது அரையாண்டு] பரீட் சைகளுக்கு. தகுதியான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. பரீட்சை 26-04-93 ஆரம்பமாவ தால், 10-04-1993 இற்கு முன்னதாக தமது விண் ணப்பப்படிவங்களை சமர்ப் பிக்குமாறு வேண்டப்படு கின்றீர்கள். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும்.

– பதிவாளர்

(சி-6272)

விக்கப்படுகிறது. அத்துடன் இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மிதிவெடி

மாக சென்ற சிப்பாயே மேற் படி மிதி வெடிக்கு இலக்காகி பலியானார் என்று தெரிய வருகின்றது.

ணங்களின் ... மாற்றியமைத்து ஒரே தமிழ் மாகாணம் அமைப்பது பற்றி பேச்சு நடத்த கொழும்பி லுள்ள தமிழ்க் கட்சிகள் தயா ராக உள்ளபோதும் அரசாங் கம் அத்தகைய பேச்சுக்களுக்கு இடமளிக்கவில்லை எனறும் குற்றம் சாட்டியுள்ளார்.

## கண்ணீர்ப் பூக்கள்



செல்வன்

**ஞா. வில்சன் நிக்கலஸ்**

(யாழ். மருத்துவபீட 1-ம் வருட மாணவன்)

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அரவணைப்பில் |
|---|---|
| 28-07-71 | 24-03-93 |

கற்பனைகள் பல வளர்த்து எமது வளாகத்தில்
கால்வைத்து காலாண்டு ஆகுகையில்
காலனவனின் சதிக்கு ஆளான எமது அருமைத்தோழா!
நீ நிரந்தரமாய் எம்மைவிட்டு அந்நியனால்
கிளாலியில் அநியாயமாகப் பிரிக்கப்பட்டாலும்
உனது நினைவுகள் எமது இதயங்களில்
பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும் தாயார், சகோதரர், சகோதரி, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக் கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

மருத்துவபீட மாணவர் ஒன்றியம்
(M. S. U)

(சி-6279)

குழுவினர் இவர்மீது துப்பாக் கிப் பிரயோகம் செய்ததாக வும் இதனால் இவர் காய மடைந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கட்சியின் உள்ளே ... ராவுக்கு எதிரானநடவடிக்கை வலுவாகி வருவதை இது காட்டுவதாக தெரிவிக்கப்படு கிறது.

## இறுதி வணக்கம்

தாயின் மடியில்
28 | 07 | 1971



தாயக மண்ணில்
24 | 03 | 1993

செல்வன்

**ஞா. வில்சன் நிக்கலஸ்**

(முதலாம் வருட மருத்துவ பீட மாணவன்)

மருத்துவக் கலையின் முதலா மாண்டில்
கருத்துடன் பயின்ற காளைநிக் கலஸே
தமிழ்த்திரு மண்ணை உயிரெனக் கருதும்
திறனுடையவனே ஞானசூரியனே
கல்வியும் அறிவும் கனித்தமிழ் ஈழ
நல்வளத் துக்கே நல்குவே னென்றாய்
புல்லியர் குண்டால் பாதியாம் வழியில்
நல்லுயிர் விடுத்தே நீளவான் சென்றாய்
கள்ளமில் லாநின் நினைவிலே நனைவோம்
கைவிலங் கொடிக்கும் காரியம் புரிவோம்

துடிப்புடைத் தோழா தூயநின் கொள்கை
தோள்களில் கொள்வோம்
தொடர்ந்து நாமுழைப்போம்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு

(சி/6281)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 26-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8783

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-5241, 24-9490, 26-6526, 26-5517, 22-8075, 27-1939, 28-4672, 26-2827, 24-8391, 27-5482, 40-5216, 26-9992, 28-1706, 42-9220, 24-3594, 41-3460, 24-6533.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்!

27-6583, 41-6296, 26-3654, 24-1250, 26-0536, 26 1658, 26-8878, 26-6846, 26-9645, 26-4691, 26-6628, 26-7187, 41-8292, 26-5046, 41-6686, 26-4657, 24-5137